புலியூர்காட்டுவலசை கிராமத்தில் பல ஆண்டுக் காலமாக இருந்து வந்த கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். சுற்றுவட்டாரத்தில் சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. இருந்த கால்நடை மருத்துவமனையையும் எடுத்துச் சென்று விட்டார்கள். பகுதி நேரமாக மருத்துவர்கள் வந்தார்கள். அவர்களும் இப்பொழுது வருவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவந்தபோது, திரும்பவும் அங்கு மருத்துவமனையும், மருந்தகமும் செயல்படும் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். ஆனால், இதுவரையில் அதற்கான எந்தவித நடவடிக்கையையும் அதிகாரி பெருமக்கள் எடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பவும் எனது சொந்த கிராமத்தில் அந்த மருத்துவமனை மற்றும் மருந்தகம் இயங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிதாக 200 கால்நடை கிளை நிலையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கு அனுமதி கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

திருமண மண்டபம்

***106598—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011 ஜனவரி 11]

திருமழபாடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி ஆலயத்திற்கு அறநிலையத் துறையின்மூலம் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் மாவட்டம், திருமழபாடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கோயில். இத்திருக்கோயிலின் மேற்கு ரதவீதியில் ஸ்ரீலஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகள் மடத்தின் சார்பில் ஒரு திருமண மண்டபமும், தெற்கு ரத வீதியில் சமுதாயக் கூடமும் உள்ளன. இவற்றில் திருமணங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. திருக்கோயில் அமைவிடம் கிராமமாக இருப்பதாலும், ஏற்கெனவே இரண்டு திருமண மண்டபங்கள் உள்ளதாலும், திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்ட நிதி ஆதாரம் இல்லாததாலும் திருமண மண்டபம் கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமழபாடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி ஆலயம் ஒரு புகழ் பெற்ற பாடல் ஸ்தலம். அதேபோல் கீழப்பழூரிலுள்ள அருள்மிகு ஆலந்துறையார் ஆலயமும் ஒரு புகழ் பெற்ற பாடல் ஸ்தலம். இந்த ஆலயங்களில் திருமண நாட்களில் ஓரே நாளில் பல நூறு திருமணங்கள் நடைபெறுகின்றன. அந்தத் திருமணங்கள் அனைத்தும் கோயில் வளாகங்களில்தான் நடைபெறுகின்றன. அப்படிக் கோயிலில் திருமணங்கள் நடைபெறுகின்றபோது பெருமளவில் இடப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அந்த இடப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஆலயங்களின் சார்பாக திருமண மண்டபம் அமைத்துக் கொடுத்தால், அந்த ஆலயங்களுக்குப் போதுமான வருமானமும், அதன்மூலம் ஏழை எளிய மக்களும் பயனடைகின்ற நிலையும் ஏற்படும். அதைக் கருத்தில்கொண்டு அந்தப் புகழ் பெற்ற பாடல் ஸ்தலங்களில் திருமண மண்டபங்கள் கட்டித் தர இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2011 ஜனவரி 11

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல அங்கே இரண்டு திருமண மண்டபங்கள் இருக்கின்றன. குறிப்பாக, திருக்கோயில் வளாகத்திலே திருமணங்களும் நடைபெற்று வருகின்றன என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, அந்தத் திருக்கோயிலைப் பொறுத்தவரையில் ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் ரூபாய் வருவாய் வரக்கூடிய நிலைதான் இருக்கிறது. அதைக்கொண்டு அந்தத் திருக்கோயிலினுடைய நிருவாகத்தைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலையில், நிதியாதாரம் இல்லாத காரணத்தால்தான் இந்தப் பதில் இங்கே தரப்பட்டிருக்கிறது. குறிப்பாக, திருமண மண்டபங்களைத் தேவைப்படுகின்ற இடங்களில் கட்டுவதற்கான உத்தரவுகளும் இப்போது வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 136 திருமண மண்டபங்கள் இந்தத் துறையின் சார்பில், திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு பெரிய வகையிலே 6 திருமண மண்டபங்களைக் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் நிதிநிலை திருப்திகரமாக இருந்தால் அதற்கு ஆவன செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருக்கோயில்களுக்கு நிறைய நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலத்தின் குத்தகைதாரர்கள் நீண்ட காலமாக பாக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே, அறநிலையத் துறையின் சார்பாக தீவிர நடவடிக்கை எடுத்து குத்தகை பாக்கிகளை வசூல் செய்து அதன்மூலம் கோயிலுக்கு நல்ல வருவாயை ஈட்டித் தருகின்ற வகையிலே இந்தத் திருமண மண்டபங்களைக் கட்டித் தந்தால் நிச்சயமாக அந்தக் கோயில்களில் முக்கால பூஜைகளும் சிறப்பாக நடைபெறும். கோயிலுக்குச் சொந்தமாக நிறைய நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களிலிருந்து முறையாக குத்தகை பாக்கிகளை வசூல் செய்வதில்லை. அப்படி வசூல் செய்தால்

2011 ஜனவரி 11]

கிட்டத்தட்ட 2, 3 திருமண மண்டபங்களைக்கூட கட்டலாம். எனவே, அறநிலையத் துறையின் சார்பாக குத்தகை பாக்கிகளை வசூல் செய்து திருமண மண்டபத்தைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் சம்பந்தப்பட்ட நிலங்களுக்கான குத்தகைத் தொகை, அதேபோல கட்டடங்களுக்கான வாடகைத் தொகைகளை வசூல் செய்வதில் இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் இருந்ததைவிட இப்போது அந்த நிலுவைத் தொகை கூடுதலாக வசூலாகி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளூர் பிரமுகர் என்ற காரணத்தால், அந்த நிலுவைதாரர்களிடம் சொல்லி திருக்கோயில்களுக்கு விரைந்து அந்த வாடகைத் தொகை நிலுவைகள் வசூலாவதற்கு முயற்சி மேற்கொண்டால் எதிர்காலத்தில் விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில் எனது தொகுதியில் அருள்மிகு திருவப்புடையார் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு முந்தைய பழமையான கோயிலாகும். இந்தக் கோயிலில் திருமணக் காலங்களில் அதிகமான திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, திருமணக் கூடம் அல்லாமல் 200, 300 பேர் அமர்ந்து சாப்பிடுகின்ற அளவிலே ஒரு பெரிய dining hall-ஐ இந்தக் கோயிலில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிடுவதைப்போல, எல்லாத் திருக்கோயில்களுக்கும் திருமண மண்டபங்களைக் கட்டுவது, அதேபோல அரங்குகளை அமைப்பது போன்றவையெல்லாம் ஒரே நாளில் செய்துவிட முடியாத ஒன்று. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு படிப்படியாகப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை, குறிப்பாக திருக்கோயில்களுக்கு வந்து செல்லக்கூடிய பக்தர்களுக்கு ஏராளமாகச் செய்து வருகிறது. மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில்கூட ரூ.14 கோடி மதிப்பீட்டில் ஒரு நல்ல பிரம்மாண்டமான திருமண மண்டபம் கட்டுவதற்கான அனுமதி இப்போது வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மண்டபம் தேவைக்கேற்பவும், அதேபோல நிதியைப் பொறுத்தும் அமைத்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-20*

ஸ்ரீவில்லிபுத்தூர் புகழ்பெற்ற ஆண்டாள் திருக்கோயிலில் இப்போது உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீதிமன்ற உத்தரவையும் மீறி--அந்தச் சுவாமியை ஒரு மண்டபத்தில் நிறுத்தாமல், *3* முறை நீதிமன்ற உத்தரவை மீறி—புறப்பாடு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இந்த முறையாவது அதை உடனடியாக அமல்படுத்துமாறு தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்ள விழைகின்றேன். ஏனென்றால், *3* முறை சொன்னபோதும் அரசினுடைய அமைச்சரவையில் இல்லாத, அல்லது எந்த அதிகாரியாகவும் இல்லாத திருக்கோஷ்டியூர் மாதவன் என்பவர் சொன்னால்தான் அது நடைமுறைப்படுத்தப்படுமென்று அந்தக் கோயிலில் உள்ள ஆணையர் சொல்கிறார். இதை உடனடியாகத் தீர்த்து ஏற்கெனவே இருந்த நடைமுறை வழக்கத்தையும், அதேசமயம் நீதிமன்ற உத்தரவுக்கு ஆப்பு அடிக்காவண்ணமும் தயவுசெய்து இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. சேகர் அவர்கள், நேற்றையதினம் அவரிடத்திலே வரப்பெற்ற ஒரு மனுவை என்னிடத்தில் காட்டி அதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். நானும் ஆணையரிடத்தில் அதுபற்றிப் பேசி, நீதிமன்ற உத்தரவு எப்படி இருக்கிறதோ அவ்வாறு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறேன். மூன்றாவது நபர் பொறுப்பில் உள்ள திருக்கோஷ்டியூர் என்பதும் பாடல் பெற்ற ஸ்தலம். குறிப்பாக, இராமானுஜர் 'ஓம் நமோ நாராயணா' என்ற நாமத்தைத் தந்தருளிய ஸ்தலம். ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் திருக்கோஷ்டியூருக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லியுள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, நீதிமன்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

மின் வேலி

***122256—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் மலைப்பகுதியைச் சுற்றியுள்ள இடங்களுக்கு மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.